(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | தவசீலன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

13.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW1

அரசு தரப்பு சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

நான் அரியமங்களம் காமராஜர் நகரில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையர் இனத்தை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் இந்து நாடார் இனத்தை சேர்ந்தவர்கள். நான் அரியமங்களம் அம்மாகுளம் பகுதியில் உள்ள குடிசை மாற்று வாரியத்தில் உள்ள சர்வே எண். 202/2 பிளாட் எண். 91 மற்றும் 92 பாரதிதெருவில் உள்ள 118 பி என்ற வீட்டின் அளவு 1206 சதுரஅடி ஆகும். மேற்படி இடம் நீலகிருஷ்ணன் மற்றும் அவரது மனைவி பாப்பா அவர்கள் இருவர் பெயரிலும் உள்ள இடத்தை அவர்களது மகன் பாண்டியன் என்பவர் முன்னிலையில் 2013 ம் ஆண்டு கடன் பத்திரம் போட்டு ரூ.10 இலட்சத்திற்கு மேற்படி நிலத்தை பெற்றேன். மேற்படி இடத்தை கோட்டை பத்திர அலுவலகத்தில் வைத்து பதிவு செய்தோம். அதன்பின் நவம்பர் மாதம் கிரையம் பத்திரம் போட்டோம். ஆஜர் எதிரிகள் நான் அந்த வீட்டை கிரையம் வாங்குவதற்கு முன்பிருந்தே அந்த வீட்டில் குடியிருந்து வந்தார்கள். வாடகையை பாப்பா பெற்று வந்தார். நான் கிரையம் பெற்ற பிறகு என்னிடம் ஆஜர் எதிரிகள் வாடகை தொகையை தரவில்லை. அதனால் 13.02.2022 ம் தேதியன்று காலை சுமார் 11 மணியளவில் மேற்படி வீட்டை நான் கிரையம் வாங்கி உள்ளபடியால்

வீட்டை காலி செய்து கொடுங்கள் என்று ஆஜர் எதிரிகளிடம் கேட்டதற்கு 1ம் எதிரி நான் இந்த வீட்டில் குடியிருப்பது தெரிந்து நீ எப்படி வீட்டை வாங்கலாம், நீ என்ன அவ்வளவு பெரிய ஆளு புண்டையா பற பயல்லாம் எப்படி வாங்கலாம், என்னோட செல்வாக்கு என்ன, என்னோட கௌரவம் என்ன, உன்னோடு தகுதி என்ன நீ எப்படி வீட்டை வாங்கலாம், ஒழுங்கா வீட்டை என்னிடம் விற்றுவிட்டு ஓடி போயிரு இல்லன்னா நான் ஒரு பழைய சாராய வியாபாரி உன்ன கொன்று விடுவேன் என்று மிரட்டினார். அப்போது அவரது மனைவி கலைசெல்வி வீட்டின் உள் இருந்து அரிவாளுடன் வெளியே வந்து 1ம் எதிரியிடம் நீ சொல்லுமாமா இந்த பற பயலே வெட்டி ஆத்துல விட்டுவிடுகிறேன் என்று தகராறு செய்தார்கள். பின் இது குறித்து காவல் துணை ஆணையரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகார் அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

நான் காவல் உதவி ஆணையரிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. சம்பவ நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு பின்புறம் அரியமங்களம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரி. சம்பவத்திற்கு பின்னிட்டு அரியமங்களம் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. நான் ஆளுங்கட்சியில் வட்ட செயலாளராக உள்ளேன் என்றால் சரி. அடிக்கடி காவல் நிலையத்திற்கு செல்வேன் என்றால் இல்லை. நான் அடிக்கடி காவல் நிலையத்திற்கு பஞ்சாயத்து செய்வதற்கு செல்வேன் என்றால் தவறு. நான் கிரையம் பெற்றதாக சொல்லக்கூடிய வீட்டில் ஆஜர் எதிரிகள் சுமார் 5 ஆண்டு காலமாக குடியிருந்து வருகிறார்கள். எதிரி குடியிருந்ததாக சொல்லக்கூடிய வீடு குடிசை மாற்று வாரியத்தில் இருந்து நீலகிருஷ்ணனுக்கும் அவரது மனைவி பாப்பாவிற்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரி. நீலகிருஷ்ணன் இறந்த பிறகு பாப்பாவிற்கும் பாண்டியனுக்கும் சொந்தமானது என்றால் சரி. பாண்டியனுக்கும் பொன்ராஜ்க்கும் வரவு செலவு இருந்தது தெரியுமா என்றால் வரவு செலவு எதுவும் கிடையாது. 1ம் எதிரி அந்த வீட்டில் வாடகைக்கு குடியிருக்கிறாரா அல்லது ஒத்திக்கு குடி இருக்கிறாரா என்றால் unaccount ல் இருக்கிறார். 10.10.2011 ம் தேதி 1ம் எதிரி குடியிருக்கும் வீட்டை பொறுத்து

பாப்பாவிற்கும் பாண்டியனுக்கும் ஈட்டு கடன் கொடுத்தேன் என்றால் சரி. ஈட்டுகடன் எழுதி கொடுத்த 4 மாதத்தில் பாப்பா இறந்துவிட்டார் என்றால் சரி. ஒரு சொத்தை வாங்குவது என்றால் அரசாங்கத்தின் முத்திரை தாள் வாங்கி பதிவாளர் அலுவலகத்தில் கிரைய பத்திரத்தை பதிவு செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும், குடிசை மாற்று வாரியத்தில் அவ்வாறு பதிவு செய்யமுடியாது. ஆனால் ஈட்டு கடனை பதிவு செய்தேன் என்றால் சரி. அதன் ஆவண எண். 3545/2011 என்றால் சரி. ஈட்டுகடன் பதிவு செய்த அடுத்த மாதத்திலே நான் கிரைய சாசனம் செய்துகொண்டேன் என்றால் சரி. ஆனால் அந்த கிரைய பத்திரத்தை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரி. 28.11.2018 ம் தேதி ஆவண எண். 4534/2018 ன் படி ஈட்டு கடனை ரத்து செய்தேன் என்றால் சரி. நான் பாண்டியனிடம் கிரையம் செய்த ஆவணம் செல்லாது என்றால் தவறு, ஆவணம் செல்லும். ஈட்டு கடனை ரத்து செய்த அடுத்த ஆறு மாதத்தில் பாண்டியன் இறந்து விட்டார் என்றால் சரி. மேற்படி நீலகிருஷ்ணன், பாப்பா மற்றும் பாண்டியன் இறந்துவிட்டபடியால் சொத்தின் அடுத்த உரிமையாளர் பாண்டியனின் மனைவி ஜலஜா என்றால் இல்லை. பாண்டியனின் மனைவி ஜலஜா உயிரோடு இருக்கிறார் என்றால் சரி. குடிசை மாற்று வாரியத்தில் 16.12.2022 ஆவண எண். 5389/2022 ன் படி அந்த சொத்து வாரிசின் அடிப்படையில் ஜலஜாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. மேற்படி ஜலஜா அந்த சொத்தை 1ம் எதிரிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 17.11.2022 ம் தேதி மேற்படி சொத்தை ஆவண எண். 5410/2022 ன் படி 1ம் எதிரிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கும் 1ம் எதிரி குடியிருக்கும் சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் இல்லை, நான் அந்த வீட்டை விலைக்கு வாங்கி விட்டேன். நான் கிரையம் பெற்றுவிட்டேன் என்பதற்கான தகுந்த ஆதாரம் எதுவும் போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் நான் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் தவறு. சாட்சி மதன்குமார், திருஞானம், சத்தியபிரபு, சரவணன், தண்டாயுதபானி, ராம்குமார், மணிமாறன் ஆகியோர் சம்பவ நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் இருந்ததை நான் பார்த்தேன். மேற்படி சாட்சிகள் அனைவரும் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் இருந்து பார்த்தார்கள் என்று புகாரில் கூறவில்லை என்றால் சரி. என்னை

04.06.2022ம் தேதி காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார். போலீசார் விசாரணையில் மேற்படி சாட்சிகள் அன்றைய தேதி உடன் இருந்தார்கள் என்று கூறிஉள்ளேன். என்னுடைய தொழிலே அரசியலில் இருந்து கொண்டு அடுத்தவர்கள் சொத்தை அபகறிப்பது என்றால் பொய். அது போல் தான் எதிரிகள் எவ்வித சொத்தையும் அபகறிக்கவும் இல்லை, சாதி குறித்து திட்டவும் இல்லை, எதிரிகளின் சொத்தை அபகறிக்க வேண்டி எனது சாதியை மையமாக வைத்தும், அரசியலில் இருப்பதை பயன்படுத்தியும் பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. மேற்படி சாட்சிகள் அனைவரும் எனது நண்பர்கள் என்றால் 50 வருட காலமாக நான் ஒரே இடத்தில் குடி இருப்பதால் எனக்கு தெரியும். சாட்சி ராம்குமார் மெக்கானிக் ஷாப் வைத்துள்ளார் என்றால் சரி. சாட்சி ராம்குமார் என்னுடைய இடத்தில் தான் மெக்கானிக் ஷாப் வைத்துள்ளார். எனக்கும் அங்கு தான் அலுவலகம் என்றால் சரி. மேற்படி சாட்சிகளை நான் பொய்யாக ஜோடித்து அழைத்து வந்துள்ளேன் என்றால் தவறு. மேற்படி சாட்சிகள் அனைவரும் வெவ்வேறு இடத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் சரி. சம்பவமானது சுமார் 1 மணி நேரம் நடந்தது. அம்மாகுளம் மெயின்ரோடு தென்வடல் ரோடு என்றால் சரி. கிழக்கு மற்றும் மேற்கில் வரிசையாக நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரி. அங்கு அருகில் இருந்தவர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். நான் சொன்னது போல் எந்த வழக்கு சம்பவமும் நடக்கவில்லை, நான் காவல் உதவி ஆணையரிடமும் புகார் கொடுக்கவில்லை, சொத்தை அபகறிக்க வேண்டி என் சாதி பெயர் குறித்து திட்டினார்கள் என்று பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | மதன்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of 13.04.2023

Accused present.

Spl. SC 34/2022

PW2

அரசு தரப்பு சாட்சி 2 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

ஆஜர் எதிரிகளை தெரியும். 13.02.2022 ம் தேதி அம்மாகுளம் வழியாக ஆடு வாங்க நானும் திருஞானமும் சென்றோம். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது. அப்போது அங்கு காவல் உதவி ஆணையர் இருந்தார், அப்போது அவர் கேட்டுக்கொண்டதற்கினங்க என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் இரண்டாவதாக கையொப்பம் செய்தேன். அது அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் கண்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

(இத்தருணத்தில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய சிறப்பு அரசு வழக்கறிஞரால் அனுமதி வேண்டி அனுமதி அளிக்கப்படுகிறது)

அதகுவி

போலீசார் விசாரணையில் 04.06.2022 ம் தேதி 16 மணியளவில் காவல் உதவி ஆணையர் வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் திருஞானமும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

எதகுவி – இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | திருஞானம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of 13.04.2023

Accused present.

Spl. SC 34/2022

PW3

அரசு தரப்பு சாட்சி 3 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

ஆஜர் எதிரிகளை தெரியும். அசா2 ஐ தெரியும். 04.06.2022 ம் தேதி காலை 11 மணியளவில் அம்மாகுளம் வழியாக ஆடு வாங்க நானும் அசா2 ம் சென்றோம். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது. அப்போது அங்கு காவல் உதவி ஆணையர் இருந்தார், அப்போது அவர் கேட்டுக்கொண்டதற்கினங்க என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் முதலாவதாக கையொப்பம் செய்தேன். அது அதசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் கண்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

(இத்தருணத்தில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய சிறப்பு அரசு வழக்கறிஞரால் அனுமதி வேண்டி அனுமதி அளிக்கப்படுகிறது)

அதகுவி

போலீசார் விசாரணையில் 04.06.2022 ம் தேதி 16 மணியளவில் காவல் உதவி ஆணையர் வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் அசா2 ம் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

எதகுவி – இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | சத்யபிரபு |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

13.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW4

அரசு தரப்பு சாட்சி 4 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

அசா1 ஐ தெரியும். அவர் என்ன சாதியை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியும். 13.02.2022 காலை 11 மணியளவில் நான் அசா1 உடன் அவர் கிரையம் பெற்ற பாரதியார் தெருவிற்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள். அன்றைய தினம் தான் நான் அவர்களை முதன் முதலாக பார்த்தேன். 1ம் எதிரி அசா1 ஐ பார்த்து தேவுடியா பயலே உன்னால முடிந்ததை பார்த்துக்கொள் என்று தகாத வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தார். பின் அசா1 னிடம் பிரச்சனை குறித்து விசாரித்த போது மேற்படி வீட்டை தான் கிரையம் பெற்றதாகவும், அதை எதிரிகள் காலி செய்து தர மறுக்கிறார்கள் என்றும் என்னிடம் கூறினார். பின் அசா1 இது குறித்து புகார் கொடுத்தார். சம்பவம் குறித்து காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

13.02.2022 ம் தேதி என்னை இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். அசா1 ஆளுங்கட்சியை சேர்ந்தவர் என்றால் சரி. நானும் அதே கட்சியில் உள்ளேன் என்றால் சரி. போலீசார் விசாரணையில் எதிரிகளின்

பெயர்களை நான் சொல்லவில்லை என்றால் சரி. அன்றைய தினம் சம்பவமானது சுமார் முக்கால் மணி நேரம் நடந்திருக்கும். அங்கு அக்கம் பக்கம் இருப்பவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் சரி. நான் குடியிருக்கும வீட்டிற்கும் அம்மாகுளத்திற்கும் இடையே சுமாா் 2 கிலோ மீட்டர் துாரம் உள்ளது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், சாதி குறித்து எதிரிகள் அசா1 ஐ திட்டவில்லை என்றாலும், நான் அரசியலில் இருப்பதால் அசா1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | சரவணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

13.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW5

அரசு தரப்பு சாட்சி 5 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன், தெரியும். அசா1 இந்து பறையர் இனத்தை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகள் என்ன இனத்தை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. 13.02.2022 ம் தேதி காலை 11 மணியளவில் அம்மா குளம் பாரதியார் தெருவிற்கு நானும் என்னுடன் மணிமாறன் என்கிற புரோக்கரும் இடம் பார்க்க சென்று அங்கு பேசிக்கொண்டிருந்த போது சத்தம் கேட்டது. என்னவென்று சென்று பார்த்த போது அசா1 அவருக்கு சொந்தமான வீட்டை ஆஜர் எதிரிகளிடம் காலி செய்து தரசொல்லி கேட்ட போது, ஆஜர் எதிரிகள் அசா1 ஐ பார்த்து பற புண்டா மவனே என்று அசிங்கமாக பேசி கட்டானை எடுத்து அடிக்க வந்தார், அப்போது 2ம் எதிரியும் வீட்டிற்குள் இருந்து வந்து அவரும் சாதி குறித்து அசிங்கமாக அசா1 ஐ பேசி அரிவாளை எடுத்து நீ சொல்லுமாமா நான் வெட்டி கொன்றுவிடுகிறேன் என்று சத்தமாக திட்டிக்கொண்டிருந்தார். காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

04.12.2022 ம் தேதி என்னை இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். நான் குடியிருக்கும வீட்டிற்கும் அம்மாகுளத்திற்கும்

இடையே சுமார்  2 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அசா1 எனக்கு பழக்கமானவர் என்றால் சரி. போலீசார் விசாரணையிலும் நான் முதல் விசாரணையில் கூறியது போல் இடம் பார்க்க சென்றோம் என்ற விவரத்தை கூறி உள்ளேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், சாதி குறித்து எதிரிகள் அசா1 ஐ திட்டவில்லை என்றாலும், அசா1 எனக்கு வேண்டியவர் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | தண்டாயுதபாணி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

13.04.2023 Accused absent, 317 crpc filed. Other Accused present.

Spl. SC 34/2022

PW6

அரசு தரப்பு சாட்சி 6 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 இந்து பறையர் இனத்தை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகள் நாடார் இனத்தை சேர்ந்தவர்கள். 13.02.2022 ம் தேதி காலை 11 மணியளவில் அம்மாகுளம் பாரதியார் தெருவிற்கு எனது நண்பர் ராம்குமாருடன் இன்னொரு நண்பரை பார்க்க அங்கு சென்றிருந்த போது வீட்டு வசதி வாரியத்தில் உள்ள பாப்பாவிற்கு சொந்தமான வீட்டை அசா1 ரூ.10 இலட்சம் முன் பணம் கொடுத்ததாகவும், அதனால் ஆஜர் எதிரிகளை அந்த வீட்டில் இருந்து காலி செய்து தருமாறு அசா1 கேட்டுள்ளார். அதற்கு பின் அசா1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு 1ம் எதிரி அசா1 ஐ பார்த்து பற தேவுடியா பயலே வீட்டை காலி செய்ய முடியாது என்றும், உன்ன கொல்லாமல் விடமாட்டேன் என்றும், 2ம் எதிரி அரிவாளுடன் வந்து நீ சொல்லுமாமா அவனை நான் வெட்டி போட்டுவிடுகிறேன் என்றும் கூறினார். இது குறித்து காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

04.06.2022 ம் தேதி என்னை இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில்

வைத்து போலீசார் விசாரித்தார்கள். நான் சொன்ன வாக்குமூலத்தை ரைட்டர் எழுதி கொண்டார் அதில் நான் கையொப்பம் செய்தேன், அதை என்னிடம் படித்து காண்பித்தார்கள். நான் குடியிருக்கும வீட்டிற்கும் அம்மாகுளத்திற்கும் இடையே சுமார் 10 கிலோ மீட்டர் துூரம் உள்ளது. அம்மாகுளம் தென்வடல் ரோடு என்றால் சரி. சம்பவமானது முக்காமல் மணி நேரத்திற்கு மேல் நடந்தது ஆனால் நான் சுமார் அரை மணி நேரம் நடந்தது. போலீசார் விசாரணையிலும் நான் முதல் விசாரணையில் கூறியது போல் நண்பரை பார்க்க சென்றேன் என்ற விவரத்தை கூறி உள்ளேன். போலீசார் விசாரணையிலும் நான் முதல் விசாரணையில் கூறியது போல் அசா1 ரூ.10 இலட்சம் முன் பணம் கொடுத்து கிரைய ஒப்பந்தம் செய்தார் என்ற விவரத்தை கூறி உள்ளேன். அசா1 எனக்கு பழக்கமானவர் என்றால் சரி. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், சாதி குறித்து எதிரிகள் அசா1 ஐ திட்டவில்லை என்றாலும், அசா1 எனக்கு வேண்டியவர் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | ராம்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

13.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW7

அரசு தரப்பு சாட்சி 7 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 இந்து பறையர் இனத்தை சேர்ந்தவர். நான் துர்கா டு வீலர் ஒர்க் ஷாப் அரியமங்களம் பஸ்ஸ்டாப் அருகே வைத்துளளேன். ஆஜர் எதிரிகள் நாடார் இனத்தை சேர்ந்தவர்கள். 13.02.2022 ம் தேதி காலை 11 மணியளவில் அம்மாகுளம் பாரதியார் தெருவிற்கு எனது நண்பர் அசா6 உடன் இன்னொரு நண்பரை பார்க்க அங்கு சென்றிருந்த போது அங்கு சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது என்னவென்று சென்று பார்க்க அசா1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு 1ம் எதிரி அசா1 ஐ பார்த்து பற தேவுடியா பயலே வீட்டை காலி செய்ய முடியாது நீ என்ன பெரிய ஆளா என்று அசிங்கமாக கூறினார். இது குறித்து காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

என்னை இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் வைத்து சம்பவதன்றே மாலை போலீசார் விசாரித்தார்கள். நான் குடியிருக்கும வீட்டிற்கும் அம்மாகுளத்திற்கும் இடையே சுமார் 2 கிலோ மீட்டர் துாரம் உள்ளது. நான் மெக்கானிக் ஷாப் வைத்துள்ளேன் என்றால் சரி. அங்கு தான் அசா1 தனது கட்சி அலுவலகத்தையும

வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரி. போலீசார் விசாரணையிலும் நான் முதல் விசாரணையில் கூறியது போல் நண்பரை பார்க்க சென்றேன் என்ற விவரத்தை கூறி உள்ளேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், சாதி குறித்து எதிரிகள் அசா1 ஐ திட்டவில்லை என்றாலும், அசா1 எனக்கு வேண்டியவர் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | மணிமாறன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

13.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW8

அரசு தரப்பு சாட்சி 8 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 இந்து பறையர் இனத்தை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகள் நாடார் இனத்தை சேர்ந்தவர்கள். நான் அரியமங்களத்தில் குடியிருந்து வருகிறேன். 13.02.2022ம் தேதி காலை 11 மணியளவில் அம்மாகுளம் பாரதியார் தெருவிற்கு நானும் அசா5ம் இடம் பார்க்கும் விஷயமாக சென்றிருந்தோம். அப்போது 1ம் எதிரி குடியிருக்கும் வீட்டிற்கு அருகே கும்பலாக இருந்தது. பின் சென்று பார்த்த போது அசா1 1ம் எதிரியை வீட்டை காலி செய்து கேட்டதற்கு அசா1க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு 1ம் எதிரி அசா1 ஐ பார்த்து பற தேவுடியா பயலே வீட்டை காலி செய்ய முடியாது நீ என்ன பெரிய ஆளா என்று அசிங்கமாக கூறினார். பின் 2ம் எதிரி அசா1 ஐ தாக்குவது போல் பேசிக்கொண்டிருந்தார். இது குறித்து காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

அசா1 எனக்கு தெரிந்தவர் என்றால் சரி. நான் குடியிருக்கும வீட்டிற்கும் அம்மாகுளத்திற்கும் இடையே சுமார் 1 கிலோ மீட்டர் துாரம் உள்ளது. என்னை இந்த

வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் வைத்து என்றைய தினம் போலீசார் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. நான் சொல்ல உதவி ஆணையர் தன் கைப்பட எழுதினார். அவர் எழுதியதை நான் படித்து பார்த்தேன். அதில் கையொப்பம் போடச்சொன்னார் நான் கையொப்பம் போட்டேன். போலீசார் விசாரணையிலும் நான் முதல் விசாரணையில் கூறியது போல் இடம் பார்க்க சென்றேன் என்ற விவரத்தை கூறி உள்ளேன். நான் பார்த்த வரை சம்பவமானது சுமார் முக்கால் மணி நேரம் நடந்திருக்கும். சம்பவம் நடந்து கொண்டிருக்கும் போது தான் நான் அங்கு வந்தேன், அதற்கு முன் சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், சாதி குறித்து எதிரிகள் அசா1 ஐ திட்டவில்லை என்றாலும், அசா1 எனக்கு வேண்டியவர் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.கலைவாணி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

17.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW9

அரசு தரப்பு சாட்சி 9 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

நான் தற்போது முதுநிலை மண்டல மேலாளரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நான் திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டாட்சியராக பணியாற்றிய போது 05.08.2022 குற்ற எண். 647/2022 வழக்கின் சம்மந்தப்பட்ட தவசீலன் என்பவரது பள்ளி மாற்று சான்றிதழ் நகலின் அடிப்படையிலும், விஏஓ மற்றும் RI அறிக்கையின் அடிப்படையிலும் தவசீலன் இந்து ஆதிதிராவிடர் SC மற்றும் பொன்ராஜ் அவரது மனைவி கலைசெல்வி இந்து நாடார் BC என நான் வழங்கிய சாதி அறிக்கை அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | ஷாலினி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

17.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW10

அரசு தரப்பு சாட்சி 10 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

நான் தற்போது திருச்சி அரியமங்களம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் 05.08.2022ம் தேதி மேற்சொன்ன அதே பணியில் இருந்த போது காவல் சரக உதவி ஆணையர் அலுவலகத்தில் இருந்து கிடைக்கபெற்ற உத்தரவு படி குற்ற எண். 647/2022 வழக்கில் தவசீலன், பொன்ராஜ், கலைசெல்வி ஆகியோரின் சாதி சான்றிதழின் மெய்தன்மை அறிய கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் சென்று ஒப்புவித்து, நிலையம் வந்து அறிக்கை செய்தேன். காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

காவல் உதவி ஆணையர் என்னை 05.08.2022ம் தேதியன்றே விசாரித்தார்.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சுசிலா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2023 Accused present.

Spl. SC 34/2022

PW11

அரசு தரப்பு சாட்சி 11 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

நான் தற்போதும் அரியமங்களம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.06.2022 ம் தேதியன்று நிலைய பொறுப்பில் இருந்த போது திருச்சி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற C.No.399/DG/COP/CAMP/TRI/2022 ஐ பார்வையிட்டேன். பின் மதியம் 12 மணிக்கு காவல் நிலைய குற்ற எண். 647/2022 u/s. 294(b), 506(ii) IPC r/w 3(1)(s) SC/ST ACT ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிந்தேன். நான் பதிந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின் வழக்கில் அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை I ADJ(PCR), Trichy க்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை வழக்கின் புலன் விசாரணை நியமிக்க வேண்டி காவல் ஆணையருக்கு அனுப்பி வைத்தேன். காவல் உதவி ஆணையர் என்னை விசாரித்தார்.

எதகுவி

சம்பவமானது நான் பதிந்த முதல் தகவல் அறிக்கையின் படி 13.02.2022 ம் தேதியன்று காலை 11 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வாதி தவசீலன்

மாநகர காவல் ஆணையரிடம் எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் 16.03.2022 அன்று புகார் தயாரிக்கப்பட்டு 17.03.2022 ம் தேதியன்று ஆணையரிடம் கொடுக்கப்பட்டது. ஆய்வாளர் அலுவலகத்திற்கு 18.03.2022 ம் தேதியன்று வாதி தவசீலன் கொடுத்த புகார் வந்தது. ஆனால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 04.06.2022 ம் தேதி 12 மணி என்றால் சரி. மேற்படி கால தாமத்திற்கான காரணம் குறித்து முதல் தகவல் அறிக்கை காலம் 8 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. அசா1 தான் ஆணையரிடம் புகார் கொடுக்கவில்லை, உதவி ஆணையரிடம் தான் புகார் கொடுத்தேன் என்று அவர் கூறி இருந்தால் அது தவறு. முதல் தகவ்ல அறிக்கையானது சொன்ன தேதி நேரத்தில் பதிவு செய்யபடவில்லை என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of I Additional District & Sessions Judge(PCR), Tiruchirappalli

| | | |
|---|---|---|
| Name | : | திரு.காமராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | சாட்சியாக |
| Age | : | |
| Religion | : | |

Solemnly affirmed accordance with the provisions of Act X of 1873 on the day of

26.05.2023 Accused 2 absent, 317 crpc filed. Other Accused present.

Spl. SC 34/2022

PW12

அரசு தரப்பு சாட்சி 12 வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

அதமுவி

நான் தற்போது பொன்மலை காவல் சரக உதவி ஆணையராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.06.2022ம் தேதி அரியமங்களம் காவல் நிலைய குற்ற எண். 647/2022 u/s. 294(b), 506(ii) IPC r/w 3(1)(s) SC/ST ACT வழக்கினை திருச்சி மாநகர காவல் ஆணையரின் செயல்முறை ஆணை எண். C.No.C1/13765/2022 dated 04.06.2022 ஆனது அதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்தரவின் பேரில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே மாலை 5 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திருஞானம் மற்றும் மதன்குமார் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். அவை முறையே அதசாஆ 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் தவசீலன், திருஞானம், மதன்குமார், தண்டாயுதபானி, மணிமாறன், சரவணன், சத்தியபிரபு ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.06.2022ம் தேதி வாதி தவசீலன் எதிரிகள் பொன்ராஜ், கலைசெல்வி ஆகியோருக்கு சாதி சான்றிதழ் கேட்டு திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் மதுரை உயர் நீதிமன்ற கிளையின்

உத்தரவின் பேரில் கீழமை நீதிமன்றத்தில் பிணை பெற்ற விவரம் தெரியவந்தது. 12.08.2022ம் தேதி இவ்வழக்கின் வாதி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் கிடைத்தும் சாதி சான்று வழங்கிய வட்டாட்சியர் அவர்களையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த SI சுசிலா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது u/s. 294(b), 506(ii) IPC r/w 3(1)(s) SC/ST ACT ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சிகள் அசா2 மற்றும் 3 ஆகியோர் கூறியதை தான் நான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

எதகுவி

வழக்கின் புகாரானது நேரடியாக காவல் ஆணையரிடம் கொடுக்கப்பட்டு அதன் பின் விசாரணைக்கு எடுக்கப்பட்டது என்றால் சரி. வழக்கின் புகார் நேரடியாக என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் தவறு. அசா1 கொடுத்த புகாரில் சாட்சிகள் திருஞானம், சத்தியபிரபு, சரவணன், தண்டாயுதபாணி, ராம்குமார், மணிமாறன் ஆகியோர்கள் சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரி. அசா1 1ம் எதிரியை வீட்டை காலி செய்ய சொல்லி கேட்க சென்றபோது தான் சம்பவம் நடந்தது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பிரச்சனைக்கு உரிய வீடு 1ம் எதிரிக்கு சொந்தமானதா அல்லது அசா1க்கு சொந்தமானதா என்றால் எனது விசாரணையில் அசா1க்கு சொந்தம் என்று அவர் நான் விசாரித்த போது அவர் வாக்குமூலமாக கூறி உள்ளார். அது சம்மந்தமாக ஆவணங்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை. மேற்படி வீடானது யாருக்கு சொந்தமானது என்பது குறித்து பத்திர அலுவலகத்தில் மனு செய்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி வீடானது நீலகிருஷ்ணன் மற்றும் பாப்பா ஆகியோருக்கு சொந்தமானது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தவறு. நீலகிருஷ்ணன் மற்றும் பாப்பாவின் மகன் பாண்டியன் என்றால் சரி. நீலகிருஷ்ணன் மற்றும் பாப்பாவின் இறப்பிற்கு பிறகு வாரிசு அடிப்படையில் பாண்டியனுக்கு சொந்தமானது என்று என் விசாரணையில் தெரியவந்தது. பாண்டியன் இறந்தபிறகு அடுத்த வாரிசு என்ற முறையில் பாண்டியனின் மனைவி ஜலஜாவிற்கு குடிசை மாற்று வாரியத்தில் பெயர் மாற்றப்பட்ட விவரம் எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் இல்லை. பாண்டியன் மனைவி ஜலஜா என்பவர் 1ம் எதிரி மேற்படி வீட்டை 17.11.2022 தேதி ஆவண எண். 5410/2022ன் படி

விற்பனை கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்ற விவரத்தை என் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் 04.06.2022ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டு, 17.06.2022ம் தேதியன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் விசாரணையின் போது அந்த சொத்தின் உரிமையாளர் ஜலஜா என்று எனக்கு தெரிய வந்ததா என்றால் இல்லை. அசா1க்கும் அந்த வீட்டிற்கும் எவ்வித சம்மதமும் இல்லை என்றால் தவறு. பாண்டியன் அசா1க்கு எழுதி கொடுத்த ஆவணம் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரி. கண்ணுற்ற சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள சாட்சிகள் யாரும் சம்பவ இடத்திற்கு அருகில் குடியிருக்க வில்லை என்றால் சரி. சம்பவ இடத்திலேயே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரி. அங்கிருந்த யாரையும் சாட்சியாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் ஆனால் சாட்சியாக இருக்க யாரும் முன்வரவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லகூடிய இடம் அரியமங்களம் காவல் நிலையத்திற்கு நேர் பின்பக்கம் என்றால் சரி. சம்பவமானது 13.02.2022ம் தேதி நடந்தது என்றால் சரி. ஆனால் புகார் 04.06.2022ம் தேதி கொடுக்கப்பட்டது. காவல் துணை ஆணையரிடம் 16.03.2022ம் தேதியன்று புகார் கொடுக்கப்பட்டதாக உள்ளது. அசா4 1ம் எதிரி அசா1ஐ பார்த்து தேவுடியா பயலே உன்னால முடிந்ததை பார்த்துக்கொள் என்று தகாத வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தார் என்று முதல் விசாரணையில் கூறிய விவரத்தை என் விசாரணையில் கூறி உள்ளாரா என்றால் இல்லை. அசா5 13.02.2022ம் தேதி காலை 11 மணியளவில் அம்மா குளம் பாரதியார் தெருவிற்கு நானும் என்னுடன் மணிமாறன் என்கிற புரோக்கரும் இடம் பார்க்க சென்று அங்கு பேசிக்கொண்டிருந்த போது சத்தம் கேட்டது என்றும், என்னவென்று சென்று பார்த்த போது அசா1 அவருக்கு சொந்தமான வீட்டை ஆஜர் எதிரிகளிடம் காலி செய்து தரசொல்லி கேட்ட போது, ஆஜர் எதிரிகள் அசா1 ஐ பார்த்து பற புண்டா மவனே என்று அசிங்கமாக பேசி கட்டானை எடுத்து அடிக்க வந்தார் என்று முதல் விசாரணையில் கூறிய விவரத்தை என் விசாரணையில் கூறி உள்ளாரா என்றால் இல்லை. தண்டாயுதபானி எனது விசாரணையில் நண்பரை பார்க்க சென்றதாக கூறி உள்ளாரா என்றால் இல்லை. சாட்சி ராம்குமார் எனது விசாரணையில் நண்பரை பார்க்க சென்றதாக கூறி உள்ளாரா என்றால் இல்லை. சாட்சி மணிமாறன் எனது விசாரணையில் இடம் பார்க்க சென்றதாக கூறி உள்ளாரா

என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் இடத்தில் விதத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயாரித்து சாட்சிகளிடம் பின்னிட்டு கையொப்பம் பெறப்பட்டது என்றால் தவறு. இந்த வழக்கில் எந்தவொரு சாட்சியையும் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் தவறு. நான் சொல்வது போல் வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றால் தவறு. அசா1 தவசீலன் அரசியல் கட்சியில் இருப்பதால், 1ம் எதிரியின் வீட்டை அபகறிக்க வேண்டி தன் சாதியை ஒரு காரணமாக வைத்து பொய்யாக அசா1 புகார் கொடுத்துள்ளார் என்றால் தவறு. இந்த வழக்கில் நான் ஒரு தலைபட்சமாக நடந்து கொண்டு எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை.